<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>

**<u>OS.No. 1386 / 2022</u>**

வா.சா.2. அழகியண்ணன் 16.11.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் வாதி லதாவிற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்திற்கும் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 12.08.1963-ம் தேதிய பாக பிரிவினையில் 3-ம் பிரதிவாதியின் தகப்பனார் நாச்சிமுத்துக்கு ஒரு பாகமாக கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு வழக்கு சொத்துக்களை பொறுத்தும் ஏனைய சொத்துக்களை பொறுத்தும் கடந்த 19.08.1987-ம் தேதி நாச்சிமுத்துகவுண்டர், 3-ம் பிரதிவாதியும், 2, 5 பிரதிவாதிகள் சேர்ந்து ஒரு பதிவு செய்த கிரைய ஆவணம் செய்து கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இது பூர்விக சொத்து என்பதால் வாதிக்கு பாகம் கொடுக்க வேண்டும். இந்து வாரிசுரிமை சட்டப்படி பெண்களுக்கு சொத்துரிமை இல்லை என்பதால் 1987-ம் தேதியிலேயே பாகவிஸ்தி நடைபெற்றதாலும் இந்த வாதியின் தாயாருக்கு எந்த பாகமும் இல்லை என்பதாலும் இந்த வாதிக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் பாகபிரிவினை கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 19.08.1987 பாகபிரிவினை ஆவணத்தில் 2, 5 பிரதிவாதிகளுக்கு புலியூர்நத்தம் கிராம சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளபடியால் 2, 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித பாகமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் 3-ம் பிரதிவாதிக்கும் ஏற்கனவே இருந்த நிலப்பிரச்சனையை மனதில் வைத்து கொண்டு வாதிக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.11.19 10:00:16 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்